ஜனவரி 12, 2010

சிறுவர் நிலைப் பள்ளி மாணவர்களின் அன்பான பெற்றோர்/பாதுகாவலர் அறிவது,

எமது பாடசாலையானது, முன்பள்ளிக் கற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில், முழுநேர கனிஷ்ட/ சிரெஷ்ட சிறுவர் நிலைப் பள்ளி முறையின், (Full-day Junior and Senior Kindergarten) முதலாவது நிலைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நிகழ்ச்சித்திட்டமானது செப்டெம்பர் 2010 ல் அமுழுக்கு வரும்.

எமது பாடசாலை மாணவர்களுக்குக் கிடைக்கவிருக்கும் இவ்வரிய வாய்ப்பினையிட்டு நாம் பெருமையடைகின்றோம். இத்திட்டத்தினை செம்மையாகவும், முழுமையாகவும் அமுலாக்கும் பொருட்டு, நாம் பல நுணுக்கமான திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும், என்பதை நாம் யாவரும் அறிந்ததே. மேலும், இந்நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தும் பொருட்டு, எமது பாடசாலையானது சகல தேவைகளையும் பெற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக உள்ளது.

மேலும், இத்திட்டமிடல் பற்றிய விபரங்கள் அனைத்தும், உங்களுக்கு உடனுக்குடன் அறியத் தரப்படும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சகல மாணவர்களுக்கும், ஆரம்பப் பாடசாலை ஆசிரியர், முன் பிள்ளைப் பருவ ஆசிரியர் கொண்ட குழுவின் மூலம், கற்பித்தல் மேற்கொள்ளப்படும். சிறுவர் நிலைப் பள்ளி பாடவிதானமானது, இறை ஆசியின் வழிகாட்டலுடன், உங்கள் குழந்தையின் கல்வியியல், உடலியல், உளவியல், ஆன்மீகவியல், சமூகவியல் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு விரிவாக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்நிகழ்ச்சித்திட்டமானது நமது பாடசாலை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் மாணவர்களுக்கே வழங்கப்படவுள்ளது. மேலதிக விண்ணப்பங்கள் காலியாக உள்ள இடங்களைப் பொருத்து ஏற்றுக்கொள்ளப்படும்.

முன்பள்ளிக் கற்றல் நிகழ்ச்சித்திட்டமானது, பாடசாலைக்கு முந்திய நேர பிந்திய நேர நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. இதன் மூலம் சகல மாணவர்களுக்கும், முழுநேர காப்பக அடிப்படையிலான, சேவைகள் வழங்கப்படவுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டத்தில் இணைய விரும்பும் குடும்பங்களுக்கு, இச்சேவையானது குறைந்த கட்டண (Cost-recovery) அடிப்படையில் பெற்றுத் தரப்படும். இத்திட்டத்தினை செம்மையாகவும், முழுமையாகவும் அமுலாக்கும் பொருட்டு இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆய்வினைப் பூரணப்படுத்தி, திகதிக்குள் பாடசாலைக் காரியாலயத்தில் கையளிக்கும்படி தாழ்மையுடன் கேட்டக் கொள்கின்றோம்.

பாடசாலைக்கு முந்திய நேர, பிந்திய நேர நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய மேலதிக தகவல்கள் கல்வி அமைச்சின் மூலம் அண்மைக் காலங்களில் அறியத்தரப்படும்.

எமது பாடசாலைச் சுற்றறிக்கைகள் மூலம், இத்திட்டத்தின் நிலை பற்றிய விபரங்கள் உங்களுக்கு அறிவிக்கப்படும்.

மேலே தரப்பட்டுள்ள சகல விபரங்களையும், நிர்வாக சபையின் www.tcdsb.org எனும் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் பல்வேறு வகையான நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்களையும், பெறுவதற்கு எமது இணையத்தளமானது சிறந்த இடமாகும்.

இத்திட்டம் பற்றி உங்களுக்கு எழும் சகல சந்தேகங்களையும் தீர்த்துக் கொள்வதற்குப் பாடசாலையில் என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

உங்களது ஆதரவுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இங்ஙனம்,

……………………..
அதிபர்